திக்ரின் சிறப்புக்களும் அதன் பயன்களும்

பேராசிரியர், அப்துர் ரஸ்ஸாக் பின் அப்துல் முஹ்ஸின்
அல்பத்ர் (حفظه الله)

திக்ரின் சிறப்புக்களும் அதன் பயன்களும்

அரபியில்:

பேராசிரியர், அப்துர் ரஸ்ஸாக் பின் அப்துல் முஹ்ஸின் அல்பத்ர் (حفظـــــه الله)

தமிழில்:

M.B.M. இஸ்மாயில் (மதனி)

அலவற்ற அருளாலன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்....

அல்லாஹ்விற்கு உரித்தான அனைத்து புகழைக் கொண்டும் அவனைப் புகழ்கின்றேன். அனைத்து நலவுகளைக் கொண்டும் அவனை துதிக்கிறேன். நிச்சயமாக அவனை என்னால் முழுமையாக துதித்து விட முடியாது. அவன் அவனை எப்படி புகழ்ந்தானோ அது போன்றே அவன் இருக்கிறான். எங்கள் இரட்சகன் விரும்புகின்ற அவன் பொருந்திக் கொள்வதைப் போன்ற அதிகமான புகழ் அவனுக்கே உரியது. அவனது புகழ் வானம், பூமி அனைத்திலும் நிறைந்துள்ளது. அதற்குப் பின்னால் எதையெல்லாம் அவன் நாடுகின்றானோ அவை அனைத்தையும் நிரப்பியதாக அவனது உள்ளது. அவனுடைய அதிகமான அருளுக்காக அவனை நான் புகழ்கின்றேன். அவனுடைய அதிகமான கொடைகளுக்காகவும் அவனை நான் புகழ்கின்றேன். புகழ் ஒவ்வொன்றும் அவனுக்கே உரியது. சிறப்பு ஒவ்வொன்றும் அவனுக்கே உரியது. ஒவ்வொரு விடயங்களின் மீட்சியும் அவனின்பாலே உள்ளது. வானங்கள் பூமியில் உள்ள அனைத்து புகழும் அவனுக்கே உரியது. மறுமையிலும் புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது. அவனே மிகவும் நுட்பமானவன். மிகவும் அறிந்தவன்.

அல்லாஹ் சொல்கிறான்: ''பூமியில் நுழைபவற்றை அவன் அறிகிறான். அதிலிருந்து வெளியேறுபவற்றையும் அவன் அறிகிறான். வானத்திலிருந்து இறங்குபவற்றையும் அதில் ஏறுபவற்றையும் அவன் அறிகிறான். நிச்சயமாக அவன் அதிகம் இரக்கமுடையவனும் அதிகம் மன்னிப்பவனுமாவான்.'' (34:2)

உலகத்தின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையவன்.

மறுமை நாளின் அதிபதி. வணங்கப்படுவதற்கு தகுதியான உண்மையான கடவுல் அவனைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி சொல்கிறேன். அவனுக்கு யாதொரு இணையும் இல்லை. முன்னோர்கள், பின்வந்தவர்கள் அனைவரினதும் இரட்சகன் அவனே. வானங்கள், பூமியினுடைய பாதுகாவலனும் அவனே. அனைத்துப் படைப்பினங்களையும் படைத்தவனும் அவனே.

நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய தூதரும் அடியாருமாவார் என்று நான் சாட்சி சொல்கின்றேன். அவர் படைப்பினங்களில் இருந்து அவனால் தேர்வு செய்யப்பட்ட வராவார். மேலும் அவனுடைய நண்பருமாவார். அவனுடைய வஹிக்குரிய பாதுகாவலருமாவார். அல்லாஹ்வுடைய கட்டளைகளை மனிதர்களுக்கு எத்திவைப்பவருமாவார். இறைவனுடைய ஸலவாத்தும் ஸலாமும் அவர் மீது உண்டாவதாக. மேலும் அவருடைய குடும்பத்தார், தோழர்கள் மீதும் உண்டாவதாக.

நிச்சயமாக அல்லாஹ்வை திக்ரு செய்வது முக்கியமான விடயங்களுடன் தொடர்புடையதாகும். அது மிகவும் கன்னியமானதும் மகத்தானதுமாகும். கவனிக்கப்பட வேண்டியவற்றில் முதன்மையானதாகும். ஏனெனில் அது மகத்தான அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதுடன் தொடர்புபடுகிறது. வானங்கள், பூமியின் இரட்சகனையும் உலகத்தாரின் இரட்சகனையும் ஞாபகப்படுத்துவதோடு தொடர்புபடுகிறது. மேலும் படைப்பினங்களை படைத்தவனை ஞாபகப்படுத்துவதுடன் தொடர்பு படுகிறது. மனிதர்கள் அனைவரையும் உருவாக்கியவனை ஞாபகப்படுத்துவதுடன் தொடர்புபடுகிறது. நிச்சயமாக உயர்ந்த காரியங்கள் மகத்தான ஆட்சி அதிகாரம், உயர்ந்த பெயர் அனைத்திற்கும் சொந்தக்காரனான அந்த அல்லாஹ்வை ஞாபகப் படுத்துவதுடன் தொடர்புபடுகிறது.

அல்லாஹ் சொல்கிறான்: “அவன் தான் அல்லாஹ். அவன் எத்தகையவனென்றால் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை. அவன் தான் உண்மையான பேரரசன். பரிசுத்தமானவன், சாந்தியளிப்பவன், அபயமளிப்பவன், கண்காணிப்பவன், யாவரையும் மிகைத்தவன், அடக்கி ஆளுபவன், பெருமைக்குறியவன். அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். படைப்பதற்கு திட்டமிடுபவனும் அதனைச் செயல்படுத்துபவனும் அதற்கேற்ப வடிவம் கொடுப்பவனும் அல்லாஹ்வே. அவனுக்கு மிக அழகிய பெயர்கள் இருக்கின்றன. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் அவனைத் துதித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அவன் யாவற்றையும் மிகைத்தவனும் நுண்ணறிவுடையவனுமாய் இருக்கின்றான்.” (33: 23,24)

நிச்சயமாக அல்லாஹ்வை திக்ரு செய்வது எமது நேரங்களில் நாம் செய்கின்ற அமல்களில் மிகச் சிறந்த அமலாகும். பொழுதுகள் செலவிடப்படுவதற்கும் விநாடிகள் செலவிடப்படுவதற்கும் மிகச் சிறந்த ஒரு அமல் திக்ர் ஆகும். நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதால் தான் மு.ஃ. மின்களின் உள்ளங்கள் சாந்தியடைகின்றன. அவர்களின் ஆத்மாக்கள் அமைதி பெறுகின்றன. அவர்களின் உறுதி பலம் பெறுகின்றது. அவர்களுடைய ஈமான் அதிகரிக்கின்றது.

அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது சந்தோசத்திற்கான முகவரியாகும். உலகத்திலும் மறுமையிலும் வெற்றியடைவதற்கான வழியாகும். உலகம், மறுமையில் உள்ள அமைதி, ஆறுதல், ஐக்கியம், சந்தோசம் ஒவ்வொரு நலவும் அல்லாஹ்வை திக்ரு செய்வதை உறுதிப்படுத்துவதில் தங்கியுள்ளது. நிச்சயமாக

ஒவ்வொரு மார்க்கமும் வணக்கங்களும் அல்லாஹ்வுடைய திக்ரை நிலை நிறுத்துவதற்காகவே வழங்கப்பட்டன. அல்லாஹுத்தஆலா தொழுகை, நோன்பு, ஹஜ் இது தவிர உள்ள ஏனைய வணக்க வழிபாடுகள் அனைத்தையும் தன்னுடைய அடியார்களுக்கு விதியாக்கியது அவனுடைய திக்ரை நிலை நாட்டுவதற்கேயாகும். இதனால் தான் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் அல்லாஹ்வுடைய தூதர் அவர்களே ஜிஹாத் செய்பவர்களில் அதிகம் நன்மை செய்பவர்கள் யார் எனக் கேட்ட போது அல்லாஹ்வை அவர்களில் யார் அதிகமாக ஞாபகப்படுத்துகிறார்ரோ அவர்தான் என்று சொன்னார்கள். மேலும் நோன்பாளிகளில் அதிகம் நன்மை செய்பவர்கள் யார் எனக் கேட்ட போது அல்லாஹ்வை அவர்களில் யார் அதிகமாக ஞாபகப்படுத்துகிறார்களோ அவர்கள்தான் என்று சொன்னார்கள். பின்பு எங்களுக்கு தொழுகை தொடர்பாக ஞாபகப்படுத்தினார்கள். ஸகாத், ஹஜ், தர்மம் என்று நபி (ஸல்) அவர்களிடம் ஒவ்வொன்றைப்பற்றிக் கேட்டதற்குப் பிறகும் அல்லாஹ்வை அவர்களில் யார் அதிகமாக ஞாபகப்படுத்துகிறாரோ அவர்தான் அதில் அதிகம் கூலி பெறுபவர் என்று சொன்னார்கள்.

உமர் (ரழி) அவர்களுக்கு அபூபக்கர் (ரழி) அவர்கள் சொன்னார்கள். "உமரே அல்லாஹ்வை திக்ரு செய்பவர்கள் ஒவ்வொரு நலவையும் பெற்று விட்டார்கள்." அப்போது நபி (ஸல்) அவர்கள் ஆம் என்று சொன்னார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்பவர்கள்தான் மகத்தான கூலிகளுக்கு சொந்தககாரர்கள். உயர்வான இடங்களுக்கும் சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்துகளுக்கும் சொந்தக்காரர்கள் அவர்களே.

நிச்சயமாக அல்லாஹ்வை திக்ர் செய்வது உள்ளங்களுக்கு உயிரூட்டுவதாகவும் வாழ்க்கைக்கு ஒளியூட்டுவதாகவும் இருக்கிறது.

வாழ்க்கையினுடைய வளர்ச்சிக்கான காரணமாகவும் அது பலம் பெறுவதற்கான காரணமாகவும் இருக்கிறது. அதன் மூலமே அதிக நன்மைகள் பெறப்படுகின்றன. மறுமையிலும் உலகத்திலும் அளவிட முடியாத அளவு அல்லாஹ்விற்கு மாத்திரம் தெரியுமான அதிக நலவுகள் கிடைக்கின்றன. இதனால் தான் அல்லாஹ்வை திக்ர் செய்வது பற்றிய தலைப்பு எல்லாத் தலைப்புக்களை விடவும் மிகவும் முக்கியம் வாய்ந்ததும் கவனிக்கப்பட வேண்டியவற்றிலும் முக்கியத்துவம் செலுத்தப்பட வேண்டியவற்றிலும் முதன்மையானதாக உள்ளது.

நபி (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸில் உன்னுடைய நாவு அல்லாஹ்வுடைய திக்ரினால் நனைந்ததாகவே இருக்கட்டும். என்று உள்ளது. இமாம் அஹ்மத் மற்றும் பலரும் இந்த ஹதீஸை அறிவித்துள்ளனர். இது ஒரு நம்பகமான உறுதியான ஹதீஸாகும். மேலும் அதற்கு ஒரு காரணம் உள்ளது. இந்த ஹதீஸை அறிவிக்கின்ற அப்துல்லாஹ் இப்னு புஷ்ர் (ரழி) அவர்கள் சொல்கிறார்: நிச்சயமாக ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் அல்லாஹ்வின் தூதரே நிச்சயமாக இஸ்லாத்தின் கடமைகள் என் மீது அதிகரித்து விட்டன. எனக்கு ஒரு விடயத்தை கற்றுத் தாருங்கள். அதையே நான் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னார்?

வேறு ஒரு அறிவிப்பில் நிச்சயமாக இஸ்லாத்தின் கடமைகள் எங்கள் மீது அதிகரித்து விட்டன. எல்லா விடயங்களையும் நாங்கள் பின்பற்றும்படியான ஒரு விடயம் உள்ளதா? என்று கேட்கப்பட்டது அப்போதே நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸை குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறே அவர் நபி (ஸல்) அவர்களிடம் வினவினார். இஸ்லாத்தினுடைய கடமைகள் அதிகரித்துவிட்டன.

அதாவது இஸ்லாத்தினுடைய கடமைகள் அனைத்தையும் என்னால் ஒவ்வொரு நாளும் முழுமையாக பின்பற்ற முடியாத அளவுக்கு அதிகரித்துவிட்டது. அதனால் இவை அனைத்தையும் உள்ளடக்குகின்ற ஒரு நலவின் வாயிலை எனக்கு அறிவியுங்கள் அதை நான் விரும்புகிறேன். என்று சொன்னார் அப்போது நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் அல்லாஹ்வை திக்ர் செய்வதில் உன்னுடைய நாவு எப்போதும் நனையட்டும் என்று சொன்னார்கள். இந்த கேள்வியைக் கேட்ட இவர் நலவுகளை எல்லாம் மொத்தமாக உள்ளடக்குகின்ற ஒன்றை கேட்கிறார். அதை தொடர்ந்து பின்பற்றுவதற்கும் ஆசைப்படுகிறார். நபி (ஸல்) அவர்கள் அவரை திக்ர் செய்யுமாறு வழிகாட்டுகிறார்கள்.

இங்குதான் நாங்கள் அதிகம் சிந்திக்க வேண்டும். நபி (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தினுடைய கடமைகள் அதிகரித்துவிட்டன இவை அனைத்தையும் ஒவ்வொரு நாளும் என்னால் பின்பற்றுவது கடினம் எனவே எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற ஒரு விடயத்தை எனக்கு கற்றுத் தாருங்கள். நான் அதை பின்பற்றுகிறேன் அதன் மூலம் என்னுடைய சந்தோசத்தை உறுதிப்படுத்திக்கொள்கிறேன். இம்மை மறுமையினுடைய நலவுகளின் வெற்றிகளை நான் அடைந்து கொள்கிறேன். என்று அந்த மனிதர் கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் உள்ள அமல்களிலேயே மிகவும் இலகுவான, செலவு, கஸ்டம் குறைந்த பின்பற்றுவதற்கு நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் இலகுவான ஒரு அமலை கற்றுக் கொடுத்தார்கள். அதில் தான் பெரும் கூலிகள் கிடைக்கின்றன. ஏனைய அமல்களில் கிடைக்காத அளவில் அதிக நலவுகளும் அதில் கிடைக்கின்றன.

இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். நிச்சயமாக திக்ரு அதிகரித்தாலும் அது பல முறைகளில் நடந்தாலும்

அமல்களில் மிகவும் இலகுவானதும் மிகவும் சிரமம் குறைந்ததும் அதுவே. திக்ர் செய்பவர் அதிகமான முயற்சிகளை, அதிகமான கஸ்டத்தை அதற்காக செலவிட வேண்டியதில்லை. ஏனெனில் அல்லாஹ்வை திக்ர் செய்வதற்காக நாவை அசைப்பது மனிதனுக்கு கஸ்டமானதோ அவனுக்கு சிரமத்தை ஏற்படுத்தக் கூடியதோ அல்ல. அதன் மூலம் சோர்வோ, கஸ்டமோ நிகழாது. மாறாக அதனோடு அமைதியும், ஆறுதலும் மன நிம்மதியும் கிடைக்கும் அதன் மூலம் சந்தோசத்திற்கான அனைத்து விடயங்களையும் அவன் உறுதிப்படுத்திக் கொள்வான். தொழுகைக்காக பள்ளிக்கு நடந்து செல்லுதல், வுழு செய்தல், ஹஜ் செய்தல், நோன்பு இது தவிர உள்ள ஏனைய உடல் உறுப்புக்களுடன் தொடர்படுகின்ற அமல்களுடன் நாவினுடைய அமலை ஒப்பிடுகையில் இத்தகைய அமல்களில் சில கஸ்டங்கள் இருக்கும். மேலும் ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையில் ஒப்பிடுகையில் கஸ்டத்தினுடைய அளவு கூடி குறையும். ஆனால் அல்லாஹ்வை திக்ரு செய்வது எல்லா மனிதர்களுக்கும் சிறியவர்கள், பெரியவர்கள், நோயாளிகள், சுகதேகிகள், ஆண்கள், பெண்கள் என்று எல்லோருக்கும் ஒருபோதும் கஸ்டத்தை வழங்காததாகும்.

நிச்சயமாக மனிதன் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து நலவுகளைப் பெற்றுக்கொள்ள தன்னுடைய நாவை அசைப்பதற்கு சக்தியைப் பெற்றுள்ளான். அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லி அல்லாஹ்வை ஞாபகப்படுத்தி அவனை துதித்து சுப்ஹானல்லாஹ் என்று சொல்லி நாவை அசைத்து நன்மைகள் பெறுவான். இதில் நாவை அசைப்பதற்கு எந்த ஒரு கஸ்டமும் களைப்பும் ஏற்படாது மாறாக அதிகமான நன்மைகளையும் உலகத்திலும் மறுமையிலும் அல்லாஹ்வை தவிர வேறு யாராலும் கணக்கிட முடியாத அளவு அதிகமான நலவுகளையும் பெற்றுக் கொள்கிறான்.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் புகாரி முஸ்லிமில் வரக்கூடிய ஒரு ஹதீஸிலே சொன்னார்கள். நாவுக்கு இலகுவான இரண்டு வார்த்தைகள் நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸை ஆரம்பிக்கின்ற முறையை பாருங்கள் நாவுக்கு மிகவும் இலகுவான இரண்டு வார்த்தைகள் அதாவது அமல்களிலே மிகவும் இலகுவான மிகவுமே கஸ்டம் குறைந்த ஒரு அமலின் பால் வழி காட்டுகிறார். நிச்சயமாக இதைச் செய்வதனால் செய்பவர் கஸ்டத்தையோ, களைப்பையோ அடையமாட்டார். பின்னர் சொல்கிறார்கள் மறுமையில் நன்மைத் தராசிலே மிகவும் பாரமானது அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பத்திற்குரியது அதாவது அல்லாஹ்விடம் அதனுடைய நிறை மிகவும் பெரியது அது இலகுவான வார்த்தை, அழகான வார்த்தை, நாவுக்கு இன்பம் தரக்கூடிய வார்த்தை ஆனாலும் மறுமையின் நன்மை தராசிலே மிகவும் பாரமானது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது அத்தகைய வார்த்தை அது என நபி(ஸல்) அவர்கள் சொல்கிறார்கள். யார் சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று 100 தடவை சொல்கிறாரோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன அது கடல் நுரையளவு இருந்தாலும் சரியே.

யாருக்கு அல்லாஹ் உதவினானோ யாரை அல்லாஹ் பொருந்திக் கொண்டானோ அவருடைய நாவுக்கு அல்லாஹ்வை திக்ர் செய்வது மிகவும் இலகுவானதாகும். யாரை அல்லாஹ் இழிவுபடுத்தினானோ அவருக்கு அல்லாஹ்வை திக்ரு செய்வது கஸ்டமானதாகவும், கடினமானதாகவும் இருக்கும் அவரால் அல்லாஹ்வை திக்ரு செய்ய முடியாது. மாறாக அதிலே கஸ்டத்தையும் களைப்பையும் அவர் உணர்வார். சில போது அவருக்கு களைப்பும் சோர்வும் ஏற்படும். அதனால், திக்கிரிலிருந்து அவர் அலுத்து விடுவார் இது அல்லாஹ் அவரை இழிவுபடுத்தியதற்கான அடையாளங்களில் ஒன்றாகும். மேலும்

அல்லாஹ் அவரை நலவுகளில் இருந்து தடுத்துள்ளான் என்பதற்கான ஆதாரமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக.

அல்லாஹ்வை திக்ர் செய்வது நாவுக்கு இலகுவானது இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கேள்வி கேட்டவரை உன்னுடைய நாவு அல்லாஹ்வினுடைய திக்ரினால் நனைந்ததாக இருக்கட்டும் என்று சொன்னார்கள். நபி (ஸல்) அவர்கள் திக்ரினுடைய விடயத்தில் கவனம் செலுத்துவதற்கு அவரைத் தூண்டினார்கள். இது திக்ருடைய மகத்துவத்திற்கான ஒரு ஆதாரமாகும். மேலும் அல்லாஹ்விடத்தில் அதனுடைய அந்தஸ்து எவ்வளவு பெரியது என்பதற்கான ஆதாரமாகவும் உள்ளது. மேலும் நலவுகள் அனைத்தினுடைய மொத்த வாயிலாகவும் திக்ர் உள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது. எனவே ஒவ்வொரு முஸ்லிமும் திக்ரை பற்றிப் பிடித்துக் கொள்வது அவசியமாகும். திக்ர் செய்பவராக இருப்பதும் அதனோடு தொடர்பட்டவனாக இருப்பதும் திக்ர் செய்பவர்களுடன் சேர்ந்திருப்பதும் அவசியமாகும்.

மிகவும் முக்கியமான இந்த ஹதீஸோடு திக்ரினுடைய சிறப்பை பற்றி பேசுகின்ற, திக்ரை தூண்டுகின்ற அதனுடைய பெரும் கூலியை விபரிக்கின்ற மற்றும் அல்லாஹ் இந்த திக்ர் செய்பவர்களுக்காக தயார்படுத்தி வைத்திருப்பவை பற்றி குறிப்பிடுகின்ற மேலும் இந்த திக்ரின் ஊடாக கிடைக்கப்பெறுகின்ற பயன்களையும் பிரயோசனங்களையும் இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் அதனால் கிடைக்கின்ற பெரும் நலவுகளையும் குறிப்பிடுகின்ற குர்ஆனிய வசனங்களையும் ஹதீஸ்களையும் நாங்கள் ஒன்று சேர்ப்போமாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்ற இந்த வணக்கத்தின் பெரும் முக்கியத்துவம் தொடர்பில் அதிகமான செய்திகளை பெற்றுக் கொள்வோம். மேலும் அல்லாஹ்விடத்தில் அது மிகவும் உயர்ந்ததாகவும் இருக்கின்றது.

இமாம் இப்னுல் கையிம் அல் ஜவ்ஸி (ரஹ்) இந்த தலைப்பிலே பிரத்தியேகமான ஒரு நூலை எழுதியுள்ளார். அதற்கு முன்னர் அதுபோன்ற எந்த ஓர் நூல் எழுதப்படவில்லை. அது மிகவும் பெறுமதி வாய்ந்த நூலாகும். மாணவர்களுக்கு மத்தியிலும் அறிஞர்களுக்கு மத்தியிலும் பிரபல்யமானது. **அல் வாபில் அஸ்ஸையிப் பில் கலிமித்தையிப்** என்பது அதனுடைய பெயர். அல்வாபில் அஸ்செய்யிப் என்றால் பயனுள்ள மழை என்பது அதன் அர்த்தம் இந்த நூலிலே பின்வருமாறு அவர் குறிப்பிடுகின்றார். திக்ர் செய்வதற்கு நூற்றுக்கும் அதிகமான பயன்கள் உள்ளது. இமாம் இப்னுல் கையிம் அல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறிவிட்டு உலகத்திலும் மறுமையிலும் திக்ர் செய்வதன் மூலம் ஏற்படும் பயன்கள் பிரயோசனங்களை குறிப்பிடுகின்றார். திக்ரினுடைய பயன்கள், அதனுடைய பிரயோசனங்களில் எழுபதிற்கும் அதிகமானவற்றை குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட ஒவ்வொன்றும் உள்ளத்தை அசைப்பதற்கும் உணர்வுகளை உற்சாகப்படுத்தி இந்த பெரும் வணக்கத்தை செய்ய வைப்பதற்கு போதுமானதாகும். அவர் கூறியிருப்பவற்றில் இந்தளவு இருந்தால் அவர் அதன் பயன்களை முழுமையாக தொகுத்திருந்தால் என்னவாகும் என்பதை அதன் மூலம் நாங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இதனால் தான் அந்த நூலை வாசிக்கின்ற ஒவ்வொரு முஸ்லிமும் பிரயோசனத்தை நாடி பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அமைதியாக பொருளை உணர்ந்து அந்த நூலை வாசிப்பானாயின் நிச்சயமாக அல்லாஹ்வினுடைய உதவியினால் அவனுடைய நாட்டத்தினால் அல்லாஹ்வை திக்ரு செய்வதில் அதிகம் ஈடுபடுவான். அல்லாஹ்வை திக்ரு செய்வதில் அவனுடைய கவனம் அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இமாம் இபுனுல் கையிம் அல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் திக்ரினுடைய பயன்களை ஒவ்வொன்றாக கூறிய போதும், அதை விபரித்த

போதும் அதனுடைய விளக்கத்தை மிகவும் விரிவாகவே எழுதியுள்ளார். இவ்வாறு குறிப்பிட்டு முடித்த பின்னர் திக்ரினுடைய வகைகள் அதாவது ஒரு முஸ்லிம் கவனம் செலுத்த வேண்டிய திக்ரினுடைய வகைகள் பற்றி பல தலைப்புகளை எழுதியுள்ளார். ஒரு முஸ்லிம் மேலே அவர் குறிப்பிட்ட விடயங்களை வாசித்து முடிந்ததன் பிறகு திக்ரு செய்வதற்கான மிகப்பெரும் உந்து சக்தியை அவனுடைய உள்ளத்தில் பெற்றுக்கொள்கிற நேரம் அவனுக்கு முன்னால் அதற்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்கின்ற அடிப்படையிலே இமாம் அவர்கள் இதை ஒழுங்குப்படுத்தியுள்ளார்கள். இதனால் தான் இந்த நூல் ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் கவனிக்க வேண்டிய முக்கியத்துவம் செலுத்த வேண்டிய நூல் என்று நான் கருதுகிறேன்.

தந்தை இந்த நூலை வாங்குவதிலும், அதை தன்னுடைய பிள்ளைக்கு அன்பளிப்பாக கொடுப்பதிலும், தன்னுடைய வீட்டார் வீட்டிலே வைத்து அதை ஓதுவதற்கும் கவனம் செலுத்த வேண்டும். அதனை அவர்களை வாசிப்பதற்கு தூண்ட வேண்டும், மார்க்க கல்வியை படிக்கின்ற ஒரு மாணவன் அந்த நூலைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிலிருந்து பயன் பெறுவதற்கும் முயற்சிக்க வேண்டும். அதனுடைய பெரும் பயனின் காரணமாகவும் அதனுடைய அதிகமான பிரயோசனங்கள் காரணமாகவும் அதை முஸ்லிம்களுக்கு மத்தியிலே பரப்ப வேண்டும்.

இந்த என்னுடைய சிற்றேட்டிலே நான் திக்ரினுடைய பயன்களில் சிலவற்றை சுருக்கமாக கூறியுள்ளேன். இந்த தலைப்பிலே ஆரம்பத்தில் நான் சுட்டிக்காட்டிய சில பயன்களோடு இணைந்ததாக இந்த நூலில் திக்ரினுடைய பயன்கள் சிலவற்றை சுருக்கமாக எழுதியுள்ளேன்.

01. திக்ரு உள்ளத்திற்கான உயிராகும். உள்ளத்திற்கான உண்மையான உயிர் திக்ராகும். உயிர் இல்லாவிட்டால் உள்ளம் மரணித்து விடும். நபி(ஸல்) அவர்கள் சொன்னதாக புகாரியில் வரக்கூடிய ஒரு செய்தியிலே அவர்கள் சொல்கிறார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்கின்றவருக்கும் அல்லாஹ்வை திக்ரு செய்யாதவருக்கும் இடையில் உள்ள வேறுபாடு உயிருள்ளவருக்கும் உயிரற்றவருக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை போன்றதாகும்.

வேறொரு அறிவிப்பில் அல்லாஹ்வை திக்ர் செய்யப்படுகின்ற வீட்டுக்கும் அல்லாஹ்வை திக்ரு செய்யப்படாத வீட்டுக்கும் இடையில் உள்ள வேறுபாடு உயிருள்ளவருக்கும் உயிரற்றவர்க்கும் இடையில் உள்ள உதாரணத்தைப் போன்றதாகும். இங்கே நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை திக்ரு செய்பவரை உயிர் உள்ளவருக்கு ஒப்பிடுகிறார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்கின்ற வீடுகள் உயிருள்ளவர்கள் வாழுகின்ற வீடுகள் என்று சொல்கிறார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்யாதவரை மரணித்தவருக்கு ஒப்பிடுகிறார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்யாதவர்கள் வாழுகின்ற வீடுகள் மரணித்தவர்களுடைய வீடுகள் என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது மையவாடிகளாகும்.

இதனால்தான் வேறு ஒரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்: உங்களுடைய வீடுகளை மையவாடிகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அதாவது உங்களுடைய வீடுகளிலேயே அல்லாஹ்வை நீங்கள் திக்ரு செய்யுங்கள், உங்களுடைய வீடுகளிலே தொழுகையை நிலை நாட்டுங்கள், உங்களுடைய வீடுகளிலே அல்லாஹ்வுடைய குர்ஆனை ஓதுங்கள் ஏனெனில் அல்லாஹ்வுடைய பேச்சு குர்ஆன் ஓதப்படாத வீடு, அல்லாஹ்

திக்ரு செய்யப்படாத வீடு, தொழுகை நிலைநாட்டப்படாத வீடு மரணித்தவர்களின் வீடுகளான மையவாடிகள் போன்றதாகும். இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் உபரியான நபிலான தொழுகைகளை வீடுகளில் தொழுதுவதற்கு தூண்டுகிறார்கள். நபியவர்கள் சொல்கிறார்கள். ஒரு மனிதனுடைய தொழுகையில் பர்ழான தொழுகைகளுக்கு அடுத்ததாக சிறந்தது அவனுடைய வீட்டில் தொழும் நபிலான தொழுகைகளாகும். அவனுடைய வீடு அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படாத மைய்யவாடியாக இல்லாதிருப்ப தற்காக தொழப்படாத, அல்லாஹ்வை புகழப்படாத மையவாடிகள் போன்று இல்லாதிருப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு தூண்டியுள்ளார்கள்.

அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படாத வீடுகளின் நிலையே இவ்வாறு என்றால் சைத்தான்கள் மாத்திரம் ஞாபகப்படுத்தப்படும் வீடுகளின் நிலை என்னவாகும்? வீணானவையும், இசையும் கேட்கப்படும் வீடுகளின் நிலை என்ன? அதில் அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படுவ தில்லை. நிச்சயமாக அவைகள் இசைக் கருவிகளாலும், பாவமான காரியங்களை செய்வதற்கு தூண்டுகின்ற கருவிகளாலும், அசத்தியமானவற்றை கேட்டல் போன்றவற்றின் மூலமும், அவைகள் பரிபாலிக்கப்படுகின்றன. நிச்சயமாக இதுவே மரணித்தவர்களின் வீடாகும். மேலும் தொடர்ச்சியான அழிவையும் நாசத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வீடாகும் அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக.

நிச்சயமாக நாசத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வீடு எதுவெனில்: அதில் சைத்தானைத் தவிர வேறு யாரும் நுழைய மாட்டார், நிச்சயமாக அதில் மலக்குகள் நுழைய மாட்டார்கள் சைத்தானே அடிக்கடி அந்த வீட்டுக்கு வந்து செல்லக்கூடியவனாக

இருப்பான், அவனுடைய தங்கும் இடமாக அந்த வீடு இருக்கும், அந்த வீட்டிலிருந்து நலவுகள் சென்றுவிடும், தீமைகள் அதில் அதிகரிக்கும், பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ச்சியாக வரும், சோதனைகள் அதிகரிக்கும், பல வகையான வழிகேடுகளும் குழப்பங்களும் அந்த வீட்டிலே நிகழும். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

அல்லாஹ் சொல்லுகிறான்: "யார் அர்ரஹ்மானை ஞாபகப்படுத்துவதை விட்டும் புறக்கணித்து வாழ்கின்றாரோ அவருக்கு ஒரு சைத்தானை நாம் சாட்டுவோம் அவன் அவனுக்கு உற்ற தோழனாக இருப்பான் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் அவர்களை தடுப்பார்கள். ஆனாலும், நிச்சயமாக அவர்கள் நேர்வழி பெற்றவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள்" (43: 36)

இதனால்தான் முஃமின்கள் வாழக்கூடிய வீடுகளில் அவர்கள் தங்களுக்கு தாங்களே உபதேசம் செய்து கொள்வதும் வீட்டாருக்கு உபதேசம் செய்து கொள்வதும் அவசியமாகும். அல்லாஹ்வை திக்ர் செய்வதாலும் அவனுடைய குர்ஆனை ஓதுதல், தொழுகையை நிலை நாட்டுதல் போன்ற நல்ல விடயங்களை அவர்களுடைய வீடுகளில் செய்வது அவர்களுடைய வீடுகளை உயிருள்ளவர்கள் வாழுகின்ற வீடாக மாற்றுவதற்கு அவசியமாகும். மேலும், உயிருள்ளவர்கள் வாழுகின்ற வீடுகளிலே உயிர் உள்ளவர்களாக தங்களை வைத்துக் கொள்வதும் அவசியமானதாகும். அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது தான் உள்ளங்களினுடைய உண்மையான உயிராகும். அல்லாஹ்வை திக்ரு செய்யவில்லையென்றால் உள்ளங்கள் செத்துவிடும்.

இமாம் இப்னுல் கையிம் அல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் அவருடைய ஆசிரியரான ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களைத் தொட்டும் திக்ருக்கு மிகவும் ஆச்சரியமான ஒரு உதாரணத்தை அறிவித்துள்ளார்கள். திக்ருக்கும் திக்ரோடு உள்ள உள்ளத்தின் நிலைக்கும் ஒரு ஆச்சரியமான உதாரணத்தை ஒப்பீட்டு அடிப்படையில் அறிவித்துள்ளார். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: “நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது: மீனுக்கு தண்ணீர் எப்படி அவசியமானதோ அது போன்று உள்ளத்திற்கு அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது அவசியமாகும். மீன் தண்ணீரை விட்டுப் பிரியுமாக இருந்தால் அதனுடைய நிலை என்னவாகும்?” நிச்சயமாக மீண் தண்ணீரிலிருந்து வெளியேற்றப்படுமாக இருந்தால் சில நொடிப் பொழுதுகளிலே மரணித்து விடும் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயமாகும். அதுபோலவே உள்ளம் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதிலிருந்து தூரப்படுமாயின் திக்ரின் மூலம் அது பரிபாலிக்கப்படா விட்டால் செத்துவிடும். அதற்கு உயிர் இருக்காது. அல்லாஹ்வை ஞாபகப் படுத்துவதினாலேயே அது மீண்டும் உயிர் பெறும்.

அதனால் தான் அல்லாஹ் சொல்கிறான்: “விசுவாசம் கொணடோரே! அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படுங்கள் விசுவாசம் கொண்டோரே! அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உங்களை உயிர்ப்பிப்பதற்காக உங்களை அவர்கள் அழைத்தால் அவர்களுடைய அழைப்புக்கு பதிலளியுங்கள்” (08:24)

அல்லாஹ் குர்ஆனில் வஹியை ரூஹ் (உயிர்) என்று சொல்லியுள்ளான். அல்லாஹ் சொல்கிறான்: “அல்லாஹ்வுடைய

கட்டளை வந்தது. நீங்கள் அதை அவசரமாக கூறாதீர்கள். அல்லாஹ் தூய்மையானவன். அவர்கள் இணைவைப்பதை விட்டும் அவன் உயர்ந்தவனாக இருக்கிறான். மலக்குகளை அவனுடைய கட்டளையின்படி ரூஹைக் கொண்டு இறக்குகின்றான். மேலும் அவனுடைய அடியார்களில் யாரை விரும்புகிறானோ அவர்கள் மீது இறக்குகின்றான்.'' (16:02)

''அது போன்றே எங்களுடைய கட்டளைப்படி ரூஹை நாம் உமக்கு அறிவித்தோம். நீ வேதம் என்றால் என்னவென்றோ ஈமான் என்றால் என்னவென்றோ அறிந்தவராக இருக்கவில்லை. என்றாலும் எங்களுடைய அடியார்களில் இருந்து யாரை நாங்கள் விரும்புகின்றோமோ அவர்களுக்கு நேர்வழி காட்டும் ஒளியாக அதை நாம் ஆக்கினோம்.'' (42:52)

வஹியைக் கொண்டு வரும் வானவரான ஜிப்ரீல் (அலை) அவர்களை அல்லாஹ் ரூஹ் என்று சொல்கின்றான். அல்லாஹ் சொல்கிறான்: ''நம்பிக்கைக்குரிய ரூஹ் அதைக் கொண்டு இறங்கினார். நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களில் ஒருவராக இருப்பதற்காக உன்னுடைய உள்ளத்தின் மீது (இறக்கிவைத்தான்) (உன்னுடைய உள்ளத்தின் மீது) தெளிவான அரபு மொழியில் அதை இறக்கினான்.'' (42:52)

வஹியைக் கொண்டு இறங்கக் கூடிய ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரூஹ் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் வஹியும் ரூஹ் என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில் வஹியைக் கொண்டு அல்லாஹ்வை திக்ரு செய்வதன் மூலமே உள்ளம் உயிர் பெருகின்றது. அது இல்லையென்றால் உள்ளம் செத்துவிடும். இறுகிப்போகும். இருளடைந்துவிடும். தீமைகளையும்

வழிகேடுகளையும் கொண்டு அது பரிபாலிக்கப்படும். அல்லாஹ் எம்மை பாதுகாப்பானாக.

அதற்கு வஹி வந்துவிட்டால் அல்லாஹ்வுடைய திக்ர் ஆகிய குர்ஆனைக் கொண்டு அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதை அதிகரிப்பதன் மூலம் அது புத்துயிர் பெறும். அதிலே நலவுகள் அதிகரிக்கும். அதிலே நலவுகள் வளரும். பயனும் பரக்கத்தும் அதை சூழ்ந்து கொள்ளும். இது திக்ரினுடைய பயன்களிலே மிகவும் முக்கியமான பயனாகும்.

02. ஷைத்தானை அது விரட்டுகின்றது. மனிதர்களிலிருந்து அவனை தூரப்படுத்துகின்றது. ஒரு முஃமின் அல்லாஹ்வை திக்ர் செய்வதன் மூலம் பாதுகாப்புப் பெற்ற ஒரு அரணிலே இருக்கிறான். அவனிடம் ஷைத்தான் வருவதற்கான எந்த வழியும் இல்லை.

இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் முஸ்னதிலும், அவர்கள் அல்லாதவர்களும் அறிவிக்கக் கூடிய நம்பகமான ஒரு ஹதீஸிலே நபி(ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்: “நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா இப்னு ஸகரிய்யா (அலை) அவர்களை ஐந்து வசனங்களைக் கொண்டு அமல் செய்யுமாறு ஏவினான். மேலும் அவற்றைக் கொண்டு அமல் செய்யுமாறு பனூ இஸ்ரவேலர்களுக்கு கட்டளையிடுமாறும் ஏவினான். அந்த ஹதீஸிலே ஸகரியா (அலை) அவர்கள் தன்னுடைய சமூகத்திற்கு கூறினார்கள்: நிச்சயமாக என்னுடைய இரட்சகன் ஐந்து வாசகங்களை கொண்டு எனக்கு ஏவியுள்ளான். அவற்றை உங்களுக்கு ஏவுமாறும் என்னை பணித்துள்ளான் என்று கூறிவிட்டு முதலாவதாக தௌஹீதை குறிப்பிட்டார்கள் இரண்டாவதாக தொழுகையை கொண்டு ஏவினார்கள் மூன்றாவதாக தர்மத்தைக் கொண்டு ஏவினார்கள் பின்பு ஐந்தாவதாக அல்லாஹ்வை திக்ரு செய்யுமாறு ஏவினார்கள்.

அவர்கள் சொன்னார்கள் நிச்சயமாக நான் அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்யுமாறு உங்களுக்கு ஏவுகிறேன். நிச்சயமாக அல்லாஹ்வை திக்ர் செய்யும் மனிதனுக்கும் திக்ரு செய்யாத மனிதனுக்கும் உதாரணம் பின்னால் எதிரி வேகமாக் துரத்தும் ஒரு மனிதனைப் போன்றாகும். அவனை அந்த எதிரி அடைந்தால் அவனைப் பிடித்துக் கொள்வான். அவனை கொலை செய்வான். ஆனாலும் அந்த மனிதன் தன்னை பாதுகாக்கின்ற ஓர் அரணுக்குள்ளே நுழைந்து அவனை பாதுகாத்துக் கொண்டான். நிச்சயமாக ஒரு அடியான் ஷைத்தானிடம் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்தற்கான மிகப் பெரிய அரண் அவன் அல்லாஹ்வை திக்ரு செய்வதாகும் எனக்கொள்ள முடியும். அல்லாஹ்வை திக்ர் செய்பவன் மிகவும் பாதுகாப்பான ஒரு அரணிலே உள்ளான். அவன் அதிகம் பாதுகாக்கப்பட்டவனாவான். சைத்தான் அவனை வந்தடைய மாட்டான். ஒரு போதும் சைத்தான் அவனை பிடிக்கமாட்டான்.

அல்லாஹ் சொல்கிறான் "நபியே நீர் சொல்வீராக மனிதனின் இரட்சகனைக் கொண்டு நான் பாதுகாப்பு தேடுகிறேன். அவன் மனிதர்களின் அரசன். அவன் மனிதர்களின் கடவுள். மறைந்திருந்து தீய எண்ணங்களை ஏற்படுத்துபவனின் ஊசலாட்டங்களின் தீங்குகளில் இருந்தும் பாதுகாப்பு தேடுகிறேன். அவன் மனிதர்களின் உள்ளங்களில் ஊசலாட்டங்களை உருவாக்குகிறான். அவன் மனிதர்களிலும் ஜின்களிலும் இருக்கின்றான்." (சூறதுன் நாஸ்)

அல்வஸ்வாஸ் அல்லது அல்ஹன்னாஸ் என்பது சைத்தானுடைய பண்பாகும். அவனே மனிதர்களுக்கு மத்தியில் சந்தேகங்களையும் மனிதர்களுடைய உள்ளங்களிலே ஊசலாட்டங்களையும் உருவாக்ககின்ற வனாவான். இந்த இரண்டு வாசகங்களின் கருத்து தொடர்பில் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள்

கூறும் போது பின்வருமாறு சொல்கிறார்கள். “சைத்தான் மனிதனுடைய உள்ளத்திலே ஆதிக்கத்தை ஏற்படுத்தக் கூடியவன். மனிதன் மறந்தால் அவன் பொடுபோக்காக இருந்தால் அவனுடைய உள்ளத்தில் தீய எண்ணங் களை உருவாக்குகின்றான். அவன் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தி விட்டால் அவனை விட்டும் ஒதுங்கி விடுகின்றான். ஒரு அடியான் தன்னுடைய இரட்சகனை திக்ர் செய்தால் சைத்தான் அவனை விட்டும் ஒதுங்கி விடுகின்றான். அவனிடம் சிரமப்படுகிறான். அல்லாஹ்வை திக்ரு செய்பவனிடத்தில் அவன் இருப்பதில்லை. மாறாக அவனிடமிருந்து அவன் விரண்டோடுகின்றான்.

இதனால்தான் நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள். தொழுகைக்காக அழைக்கப்பட்டால் சைத்தான் காற்றுப்பறிந்தவனாக விரண்டோடுகிறான்.

அல்லாஹ்வுடைய திக்ரை அவனால் செவியேற்க முடியாது. அவனை திக்ரு நோவினைப்படுத்துகிறது. அவனை விரண்டோடச் செய்கிறது. அல்லாஹ்வை திக்ர் செய்யப்படுகின்ற இடத்தில் இருந்து முழுமையாக அவன் தூரமாகிவிடுகிறான். எனவே அல்லாஹ்வை திக்ரு செய்பவன் மிகவும் பாதுகாக்கப்பட்ட அரணிலே இருக்கிறான். அல்லாஹ்வின் நாட்டத்தினால் அவனை சைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்பான். அல்லாஹ்வை திக்ரு செய்வதில் பொடுபோக்காக இருந்தால் அல்லாஹ்வை மறந்தால் சைத்தான் அவனிடம் தொடர்ச்சியாக வருகிறான். அசத்தியத்தின்பால் அவனை தூண்டுகின்றான். பாவங்கள் செய்வதற்கு அவனை உற்சாகப்படுத்துகின்றான்.

அல்லாஹ் சொல்கிறான்: “யார் அல்லாஹ்வை <u>ஞாபகப்படுத்துவதை புறக்கணிக்கின்றானோ அவனுக்கு ஒரு</u>

சைத்தானை சாட்டிவிடுவோம். அவனுக்கு சைத்தான் உற்ற தோழனாக மாறிவிடுவான்.'' (43:36)

அதாவது அவனை விட்டம் பிரியாதவனாக என்றென்றும் அவனோடு சேர்ந்து இருப்பவனாக சைத்ான் ஆகிவிடுவான். இந்த வசனத்தை எதிர்மறையாக விளங்கினால் நிச்சயமாக அவன் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் சைத்தான் அவனை விட்டும் தூரமாகிவிடுகிவான். நிச்சயமாக திக்ரு என்பது சைத்தானை விட்டும் பாதுகாக்கக் கூடிய அரணாகும்.

இதனால்தான் உலமாக்கள் திக்ர் தொடர்பான நூல்களை எழுதும் போது அதற்கு ஹிஸ்னுல் முஸ்லிம் அல்லது அல்ஹுஸீன் அல்லது அல்ஹிஸ்ன் இது போன்ற பெயர்களை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்தப் பெயர் அதனுடைய கருத்துக்கு ஏற்ப யதார்த்தத்தின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ள ஒரு பெயராகும். ஏனென்றால் திக்ரு என்பது பாதுகாக்கும் ஒரு அரணாகும். அது முஸ்லிமைப் பாதுகாப்பதாகும். ஒரு முஸ்லிம் தன்னை பாதுகாத்துக் கொள்ளும் அரணாகவும் அது இருக்கிறது.

நிச்சயமாக சைத்தான் யார் அல்லாஹ்வை ஞாபகப்படுத்து கின்றானோ அவனிடம் நுழைவதற்கான எந்த வழியையும் பெற்றுக் கொள்ளமாட்டான். உண்ணும் போது அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் சைத்தான் அவனை விட்டும் தூரமாகிறான். வீட்டில் நுழையும் போது அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் சைத்தான் அவனை விட்டும் தூரமாகிறான். அது போன்று ஒவ்வொரு விடயங்களிலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தும் போது அந்த விடயத்திலே சைத்தான் நுழைவதற்கான எந்த வழியையும் பெற்றுக் கொள்ள மாட்டான்.

சைத்தானின் தீங்குகள், தூண்டுதல்களில் இருந்து பாதுகாப்புப் பெற்றதாக அந்த விடயம் மாறி விடும். அவனுடைய சூழ்ச்சிகள், அவனுடைய தீங்குகள், அவனுடைய ஊசலாட்டங்கள், அவனுடைய தூண்டுதல்கள் அவனுடைய பாதகங்களில் இருந்து பாதுகாப்புப் பெற்றதாக அது மாறிவிடும். நிச்சயமாக இது திக்ருடைய பிரயோசனங்களில் மிகவும் பெறுமதிவாய்ந்த மிகவும் பெரிய நன்மையாகும்.

03. உள்ளம் அமைதி பெறுவதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

அல்லாஹ் சொல்கிறான். “நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதன் மூலம் தான் உள்ளங்கள் சாந்தி அடைகின்றன.” (சூறதுர் ர.்.து)

உள்ளத்தின் சாந்தி உள்ளத்தின் அமைதி உள்ளத்தின் இன்பம் அதனுடைய பதற்றம் நீங்குவது அதனுடைய இறுகிய நிலை நீங்குவது அதனுடைய கவலைகள் நீங்குவது உள்ளத்தை சேரக்கூடிய எந்தவொரு வகையான துன்பமும் அதை விட்டு நீங்குவது உள்ளம் அமைதி பெறுவதற்கும் உள்ளம் அமைதியாக இருக்கிறது என்பதற்கான அடையாளமாகும். அல்லாஹ்லாவை அதிகம் ஞாபகப்படுத்துபவர்கள் அமைதியான உள்ளத்தின் சொந்தக்காரர்கள். அவர்களே சந்தோசமான உள்ளத்தின் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அவர்களுடைய உள்ளங்களே நிம்மதியாலும், ஐக்கியத்தாலும் எல்லா நிலைகளிலும் சந்தோசத்தாலும் நிறைந்திருக்கும். அது தன்னிடம் வசதி இருக்கின்ற போது வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கின்ற போது மாத்திரம் சந்தோசமாக இருப்பதில்லை. மாறாக அதனுடைய ஒவ்வொரு நிலைகளிலும் அது சந்தோசமாக இருப்பதைக் காண முடியும்.

உள்ளம் கஸ்டமான நிலையிலும் கஸ்டம் இல்லாத நிலையிலும் துன்பமான சந்தர்ப்பங்களிலும் வாழ்க்கை வசதிகள் அதிகரித்த நிலையிலும் வறுமையான நிலையிலும் நோயுள்ள நிலையிலும் நோயில்லாத நிலையிலும் அமைதியாக இருக்கும். அதனை பதற்றம் தீண்டாது. தனிமை அதனுள் நுழையாது. கவலைகள், திடுக்கங்கள் அதற்கு ஏற்படாது. அது எப்போதும் அமைதியானதாகவும் தன்னுடைய எல்லா நிலைகளிலும் சாந்தமானதாகவும் சந்தோசமானதகவுமே இருக்கும்.

அதனால்தான் இவ்வாறு இருக்கின்றவர்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தவர்களாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: ஒரு மு.்.மினுடைய விவகாரம் ஆச்சரியமானதாகும். ஏனெனில் அவனுடைய காரியங்கள் ஒவ்வொன்றும் அவனுக்கு நலமாகவே முடிகின்றது மு.்.மினை தவிர வேறு எவருக்கும் இவ்வாறு அமைவதில்லை. அவனுக்கு ஏதாவது சந்தோசமான விடயங்கள் ஏற்பட்டால் அவன் நன்றி செலுத்துகிறான் அது அவனுக்கு நலவாக முடிகிறது அவனுக்கு ஏதாவது தீங்குகள் நடந்தால் அவன் பொறுமையாக இருக்கிறான். அதுவும் அவனுக்கு நலவாக முடிகிறது. இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நிச்சயமாக அல்லாஹ்வை திக்ரு செய்கின்ற ஒரு இறைவிசுவாசி நிலையான அமைதியிலும் சந்தோசத்திலும் இருப்பான் அவனுடைய உள்ளம் எப்போதும் சாந்தமானதாக இருக்கும். அவனுடைய சிந்தனை மிகவும் ஆறுதலான அமைதியானதாக இருக்கும். எப்போதும் சந்தோசம் அவனிடம் நிலை கொண்டிருக்கும், நிச்சயமாக இது அனைத்தும் யார் அல்லாஹ்வை திக்ரு செய்கிறார்களோ, அவனை திக்ர் செய்வதில் தொடர்ச்சியாக இருக்கிறார்களோ அவர்களுக்கே நிகழும்.

அத்தகையவர்கள் சந்தோசத்தையும் அமைதியையும் பெற்றுக் கொள்வார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்: “விசுவாசம் கொண்டவர்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்களுடைய உள்ளங்கள் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதனால் சாந்தி அடைகின்றன நிச்சயமாக உள்ளங்கள் அல்லாஹ்வை திக்ரு செய்வதினாலேயே சாந்தி பெறுகின்றன.” (13:28)

நிச்சயமாக அவர்களுடைய உள்ளங்கள் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதனால் தான் சாந்தி அடைகின்றன வேறு எவரையும் ஞாபகப்படுத்துவதனால் அல்ல. நிச்சயமாக அவர்கள் தங்களுடைய ஒவ்வொரு நிலைகளிலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகிறார்கள்.

அல்லாஹ் சொல்கிறான். “அவர்கள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் நின்ற நிலையிலும் இருந்த நிலையிலும் தங்களுடைய விலாப்புறங்களில் சாய்ந்த நிலையிலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்றார்கள்.” (03:191)

அதாவது அவர்களுடைய எல்லா நிலைகளிலும் திக்ரு செய்வதாக அல்லாஹ் சொல்கிறான். போரில் இருக்கும் நேரம், அவர்கள் பிரயாணம் செய்யும் நேரம், இருக்கும் நேரம், நிற்கும் நேரம், நடந்து செல்லும் நேரம் அவர்களுடைய எல்லா காரியங்களிலும் அவர்கள் அல்லாஹ்வை திக்ரு செய்கிறார்கள். இந்த திக்ரின் மூலமே அவர்களுக்கு உள்ளத்தினுடைய அமைதி ஏற்படுகின்றது.

அல்லாஹ் சொல்கிறான். "நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதன் மூலம் தான் உள்ளங்கள் சாந்தி அடைகின்றன." (13:28)

04. உள்ளத்தின் இறுக்கத்தை இல்லாமல் செய்கிறது: நிச்சயமாக உள்ளம் பாவங்கள் மற்றும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலே பொடுபோக்காக இருப்பது போன்ற விடயங்களால் இறுகி விடுகின்றது. நிச்சயமாக இந்த உள்ளத்தினுடைய இறுக்கத்தை கரைப்பதற்கு திக்ரை போன்று வேறு எதுவும் கிடையாது. நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதில் பொடுபோக்காக இருப்பதைப் போல உள்ளத்திற்கு இறுக்கத்தைக் கொண்டு வருவது வேறு எதுவும் இல்லை.

அல்லாஹ் ஞாபகப்படுத்தப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் அஞ்சுகின்றது என்பதை அல்லாஹ் பின்வருமாறு சொல்கிறான்: "நம்பிக்கை கொண்டோருக்கு அவர்களது உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவு கூறுவதற்கும் சத்தியத்திலிருந்து இறங்கியதற்கும் அஞ்சி நடுங்கும் நேரம் வரவில்லையா மேலும் இதற்கு முன்னர் வேதம் வழங்கப்பட்டோர் போன்று இவர்கள் ஆகிவிட வேண்டாம் அவர்களுக்கு தூதர்களின் வருகையின் காலம் நீண்டு விட்டது. அதனால் அவர்களது உள்ளங்கள் கல்லாகி விட்டன அவர்களில் அதிகமானோர் பாவிகளாவர்"

உள்ளத்தினுடைய இறுகிய தன்மைக்கான காரணம் இந்த வசனத்தில் அறிவிப்பதைப் போல நீண்ட நேரம் அல்லாஹ்வை திக்ருசெய்யாமல் இருப்பதும் அல்லாஹ்வுடைய கட்டளைகளை நிலைநாட்டுவதை விட்டும் தூரமாக இருப்பதுமாகும். இந்த தூரம் ஏற்பட்டு விட்டால் உள்ளத்தில் இறுகிய தன்மை ஏற்பட்டு விடுகின்றது. அல்லாஹ்வை திக்ரு செய்வதன் பால் மீள்வதால்

தான் அந்த இறுக்கத்தை நீக்க முடியும். நிச்சயமாக அல்லாஹ்வின் பால் மீளுவதுதான் அந்த இறுக்கத்தை நீக்கும்.

அல்லாஹ் மேலே கூறிய வசனத்தின் அடுத்த வசனத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: ''நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பூமியை உயிர்ப்பிக்கின்றான். பூமி செத்ததற்குப் பிறகு அதனை உயிர்பிக்கிறான் நிச்சயமாக நாம் நீங்கள் சிந்திக்க முடியும் என்பதற்காக வசனங்களை தெளிவுபடுத்துகின்றோம்'' (சூறதுல் ஹதீத்)

இந்த வசனத்தில் அல்லாஹ் பூமி செத்துப் போனதன் பிறகு அதனை உயிர்ப்பிக்கின்றான் என்று குறிப்பிடுகின்றான் அதாவது நிச்சயமாக அல்லாஹ் பூமி செத்ததற்குப் பிறகு தண்ணீரைக் கொண்டு, மழையைக் கொண்டு அதனை உயிர்ப்பித்து விட்டதைப் போல மனிதர்களுடைய உள்ளங்கள் செத்துப் போனதற்குப் பிறகு தன்னுடைய உபதேசங்களைக் கொண்டும், தன்னை திக்ரு செய்வதைக் கொண்டும் அவற்றை உயிர்ப்பிக்கின்றான். நிச்சயமாக ஒரு மனிதன் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் அவனுடைய உள்ளம் உயிர் பெறுகிறது அவருடைய உள்ளத்தை விட்டும் இறுக்கம் நீங்கி விடுகின்றது.

ஒரு மனிதர் இமாம் ஹசனுல் பஸரி (ரஹ்) அவர்களிடம் வந்தார் அவர் அபு சஈதே என்னுடைய உள்ளம் இறுகி விட்டது என்றார். அதற்கு இமாம் அவர்கள் அல்லாஹ்வை திக்ரு செய்வதைக் கொண்டு அந்த இறுக்கத்தை நீக்குவாயாக என்று குறிப்பிட்டார்கள் அதாவது அல்லாஹ்வை திக்ரு செய்வதனால் உன்னுடைய உள்ளத்தில் இருக்கின்ற இறுக்கம் நீங்கிவிடும். என்று கூறினார்கள். அல்லாஹ்வை திக்ரு செய்வதனால்

உன்னுடைய உள்ளம் இளகும், அது அமைதி பெறும். அது சாந்தமடையும். என்று குறிப்பிட்டார்கள்.

05. நிச்சயமாக அல்லாஹ்வை திக்ரு செய்யும் அடியானுக்கு பெரும் பயனையும் உயர்வான அந்தஸ்தையும் அது பெற்றுக் கொடுக்கிறது.

நிச்சயமாக ஒருவர் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தினால் அல்லாஹ் அவரை ஞாபகப்படுத்துகிறான். ஏனெனில் மனிதனுடைய அமல்களுக்கேற்பவே அல்லாஹ் கூலி கொடுக்கின்றான். அல்லாஹ் சொல்கிறான். மனிதன் நலவு செய்தால் அதற்கு நலவைத் தவிர வேறு கூலி உண்டா? (55:60)

எனவே, யார் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்றாரோ அவரை அல்லாஹ் ஞாபகப்படுத்துகின்றான். யார் அல்லாஹ்வை மறந்தானோ அவனை அல்லாஹ்வும் மறந்து விடுகிறான். அல்லாஹ் சொல்கிறான்: ''அவர்கள் அல்லாஹ்வை மறந்தார்கள். அவனும் அவர்களை மறந்தான்.'' (9:67)வேறு ஒரு வசனத்தில் தக்க கூலியை அவர்களுக்கு கொடுத்தான் என்று அல்லாஹ் சொல்கிறான். (78:26) வேறு ஒரு வசனத்திலே ''பின்னர் தீங்கிழைத்தோர் அல்லாஹ்வின் வசனங்களை பொய்ப்பித்து அவற்றை கேலி செய்து கொண்டிருந்த தனால் அவர்களின் இறுதி முடிவு மிகக் கெட்டதாகவே இருந்தது.'' (30:10)

எனவே அமலின் தன்மைக்கு ஏற்பவே அதனுடைய கூலியும் அமைகின்றது. யார் அல்லாஹ்வை திக்ரு செய்கின்றானோ யார் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்றானோ அவனை அல்லாஹ்வும் ஞாபகப்படுத்துகின்றான். அல்லாஹ் சொல்கிறான். என்னை ஞாபகப்படுத்துங்கள் நான் உங்களை ஞாபகப்படுத்துகிறேன். (2:152)

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் சொல்வதாக சொல்கிறார்கள்: “நிச்சயமாக ஒரு அடியான் அவனுடைய உள்ளத்திலே என்னை ஞாபகப்படுத்தினால் நான் என்னில் அவனை ஞாபகப்படுத்துகிறேன். அவன் ஒரு கூட்டத்தில் என்னை ஞாபகப்படுத்தினால் அந்த கூட்டத்தை விட சிறந்த ஒரு கூட்டத்தில் நான் அவனை ஞாபகப்படுத்துகிறேன்”

எனவே எது பெரும் கூலி? எது உயர்ந்த நிலை? என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. அல்லாஹ் மிகவும் உயர்ந்த ஒரு கூட்டத்திடம் நம்மை சொல்வதை அடைந்து கொள்வதை விட உயர்ந்த அந்தஸ்து, உயர்ந்த கூலி எதுவாக இருக்க முடியும்? அல்லாஹ் நம்மை விட்டும் தேவையற்றவனாக இருக்கின்றான். நாம் அவனை ஞாபகப்படுத்தினால் அவனின்பால் நாம் தேவையுடையவர்களாக இருக்கின்றோம். அவன் எம்மை ஞாபகப்படுத்துவதற்காக நாம் அவனை ஞாபகப்படுத்த வேண்டும். அவ்வாறு ஞாபகப்படுத்துபவரை அல்லா உயர்ந்த ஒரு கூட்டத்திலே அவரைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடுகிறான் அல்லாஹ்வை ஒருவர் ஞாபகப்படுத்துவதால் அல்லாஹ்வுக்கு எந்தப் பயனும் இல்லை அவனுடைய ஆட்சியில் அது எதனையும் அதிகரிப்பதில்லை ஒருவர் அல்லாஹ்வை திக்ரு செய்யாமல் விடுவதனால் அவனுடைய ஆட்சியில் எதுவும் குறைவதில்லை அவனது சொந்தத்தில் எதுவும் குறைந்து விடுவதுமில்லை.

நிச்சயமாக உங்களின் முதன்மையானவரும் இறுதியானவரும் உங்களில் மனிதர்களும் ஜின்களும் மிகவும் அல்லாஹ்வை அஞ்சி வாழக்கூடிய ஒரு மனிதனைப் போன்று அவனுடைய உள்ளத்தில் இருந்தாலும் என்னுடைய ஆட்சியில் எதையும் அது அதிகரிக்காது. என்னுடைய அடியானே நிச்சயமாக உங்களில் முதன்மையானவரும், உங்களில் இறுதியானவரும்

மனிதர்களும் ஜின்களும் உங்களில் இருந்தும் மிகவும் மோசமான ஒரு மனிதனுடைய உள்ளத்தில் இருந்தாலும் அதுவும் என்னுடைய ஆட்சியில் எந்த ஒன்றையும் குறைத்து விடாது. என அல்லாஹ் சொல்வதாக முஹம்மத் (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்.

அல்லாஹ்வுக்கு வழிபடுகின்றவர்களுடைய வணக்கங்கள் அவனுக்கு எந்தப் பயனையும் தராது. அது போன்று பாவிகளுடைய எந்த பாவமும் அவனுக்கு தீங்கிழைக்காது அல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவனுடைய திக்ருகள் அவனுடைய ஆட்சியில் எதையும் அதிகரிக்காது அது போன்று அல்லாஹ்வை ஞாபகப்படுத்தாமல் இருக்கின்றவர்களினால் அவனது ஆட்சியில் எதுவும் குறைந்து விடவும் மாட்டாது. என்றாலும் அல்லாஹ் அடியார்கள் மீது கொண்ட இரக்கத்தின் காரணமாகவும் அடியார்கள் மீது கொண்ட பரிவின் காரணமாகவும் அவனை திக்ரு செய்பவர்களை மிகவும் உயர்ந்த ஒரு கூட்டத்திலே ஞாபகப்படுத்துகிறான்.

யார் அல்லாஹ்வை தன் உள்ளத்தில் ஞாபகப்படுத்திக் கொண்டானோ அவனை அல்லாஹ்வும் ஞாபகப்படுத்திக் கொள்கிறான் யார் ஒரு கூட்டத்தில் அல்லாஹ்வை திக்ரு செய்தானோ அவனை அல்லாஹ்வும் அந்த கூட்டத்தை விட சிறந்த ஒரு கூட்டத்திலே (திக்ரு செய்கிறான்) ஞாபகப்படுத்துகிறான்.

முஆவியா (ரழி) அவர்கள் அறிவிக்கக்கூடிய இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பதிவு செய்துள்ள ஒரு ஹதீஸிலே பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் அவர்களுடைய தோழர்களின் ஒரு சபைக்குச் சென்றார்கள்: உங்களை இங்கு இருக்க வைத்தது எது? என்று கேட்டார்கள் அவர்கள் நாங்கள் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதற்காக

அமர்ந்திருக்கிறோம் அல்லாஹ் எங்களுக்கு வழிகாட்டியதற்காக அவனைப் புகழ்கிறோம் எங்களுக்கு இந்த இஸ்லாத்தை அல்லாஹ் வழங்கியதற்காக அவனை துதிக்கிறோம். என்று சொன்னார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்ற இந்த நோக்கத்தை தவிர வேறு எதுவும் உங்களை ஒன்று சேர்க்கவில்லையா? எனக் கேட்டார்கள். அப்போது, சஹாபாக்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக அதைத் தவிர வேறு எதுவும் எங்களை இங்கு ஒன்றுசேர்க்கவில்லை என்றார்கள் அப்போது நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக நான் உங்களுக்கு சந்தேகத்துடன் சத்தியம் செய்பவன் கிடையாது. ஆனாலும், ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்தார்கள் நிச்சயமாக அல்லாஹ் மலக்குகளிடம் உங்களைப் பற்றி பெருமையாக பேசுகிறான் என்று எனக்கு அறிவித்தார்கள் எனக் கூறினார்கள்.

அதாவது அல்லாஹ்வை திக்ரு செய்பவர்களை மலக்குமார்களிடம் அல்லாஹுத்தஆலா பெருமையாக பேசுகிறான் அல்லாஹ் சொல்லுகிறான் என்னுடைய அடியார்களைப் பாருங்கள் என்னை ஞாபகப்படுத்துவதற்காக அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் எனக்கு நன்றி செலுத்துவதற்காக அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்னை புகழ்வதற்காக அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்று அவர்களை மலக்குகளிடம் புகழ்ந்து பேசுகிறான் என்று சொன்னார்கள்.

இதனால்தான், இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் அறிவிப்பு செய்திருக்கக் கூடிய வேறு ஒரு ஹதீஸிலே நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள் அல்லாஹ்வுடைய இல்லங்களில் ஒரு இல்லத்திலே ஒரு கூட்டம் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி அதை தங்களுக்கு மத்தியில் அவர்கள் படித்துக் கொள்கிறார்கள்

என்றால் அவர்கள் மீது அல்லாஹ்டைய அமைதி இறங்குகின்றது. அல்லாஹ்வுடைய அருள் அவர்களை சூழ்ந்து கொள்கிறது. வானவர்கள் அவர்களை சூழ்ந்து கொள்கிறார்கள் அல்லாஹ்வுடைய அருள் அவர்களை மூடிக் கொள்கிறது. வானவர்கள் அவர்களை சூழ்ந்து கொள்கிறார்கள். அல்லாஹ் அவனிடம் இருப்பவர்களிடம் அவர்களை ஞாபகப்படுத்துகின்றான். இது மிகவும் உயர்ந்த ஒரு அந்தஸ்தாகும் மிகவும் உன்னதமான மிகவும் உயர்வான ஒரு படித்தரமாகும்.

அல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவர்களே அதை அடைந்து கொள்கிறார்கள். மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களை ஞாபகப்படுத்தினான்.

ஏனெனில் உள்ளங்கள் உலகத்துடன் தொடர்புபடுவதும் உலக ஆசாபாசங்களின் பக்கம் சாய்ந்துவிடுவதுமே மிகவும் அதிகம். உள்ளங்கள் மிகவும் அதிகமாக உலகத்துடனேயே தொடர்புபடுகின்றன. அதன் ஆசாபாசங்களின் பாலே அதிகமாக சாய்கின்றன. நிச்சயமாக மனிதர்களில் ஒருவருக்கு இந்த விடயத்தைச் செய்தால் அல்லது இந்த அமலை நிறைவேற்றினால் இந்த அமீர் (தலைவர்) உன்னை இப்படி ஞாபகப்படுத்துவார் அதுபோன்று அவர் உன்னை அவருடைய பொறுப்பாளரிடம் புகழ்ந்து பேசுவார் என்று சொன்னால் அவர் உற்சாகம் அடைவதையும் அவர் செயல்படுவதையும் நாம் காணலாம். என்றாலும், நாம் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதன் மூலமே அவன் எங்களை ஞாபகப்படுத்துவதை பெற்றுக்கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டாலும் நாங்கள் பலவீனம் அடைகிறோம். திக்ரு செய்வதற்கு உற்சாகமடையவில்லை என்றால் நிச்சயமாக இது எங்களுடைய பொடுபோக்கும் கவனயீனமுமாகும். நாங்கள் அந்த

திக்ரை வீணடிப்பதாகும். நாங்கள் இந்த விடயத்திற்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் கரிசனையையும் கொடுக்காமல் இருப்பதாகும்.

06. திக்ரு செய்பவர் அல்லாஹ்வுடைய ஸலாத்தையும் அவனுடைய வானவர்களின் ஸலாத்தையும் அடைந்து கொள்கிறான்: இது நிச்சயமாய திக்ருடைய பயன்களில் உள்ள இன்னுமொரு முக்கியமான விடயமாகும்.

அல்லாஹ் சொல்கிறான்: ஈமான் கொண்டவர்களே அல்லாஹ்வை அதிகமாக ஞாபகப்படுத்துங்கள் காலையிலும் மாலையிலும் அவனை தஸ்பீஹ் செய்யுங்கள் நிச்சயமாக அவனே உங்கள் மீது ஸலவாத்து சொல்கிறான் அவனுடைய வானவர்களும் உங்கள் மீது ஸலவாத்து சொல்கிறார்கள் உங்களை இருளில் இருந்து ஒளியின் பால் வெளியேற்றுவதற்காக அவனுடைய வானவர்களும் அவனும் உங்கள் மீது ஸலவாத்து சொல்கின்றனர். (சூறதுல் அஹ்ஸாப்)

இது திக்ருடைய பயன்களில் ஒரு பயனாகும். நிச்சயமாக அல்லாஹ்வை திக்ரு செய்பவர் அல்லாஹ்வுடைய ஸலாத்தையும் அவனுடைய வானவர்களின் ஸலாத்தையும் பெற்றுக் கொள்கிறார். அல்லாஹ் அவர் மீது ஸலவாத்து சொல்கிறான் என்பதனுடைய அர்த்தம் அவரைப் பற்றி மிக உயர்ந்த ஒரு கூட்டத்திடம் அல்லாஹ் புகழ்ந்து பேசுகிறான் என்பதாகும். மலக்குகள் அவர் மீது ஸலவாத்து சொல்கிறார்கள் என்பதன் அர்த்தம் மலக்குகள் அவருக்காக துஆ செய்கிறார்கள் என்பதாகும்.

நிச்சயமாக ஒரு மனிதன் இதை உணரும் போதெல்லாம் அல்லாஹ்வை அவன் ஞாபகப்படுத்துவது திக்ரு செய்வது

அதிகரிக்கிறது. நலவுகளை அவன் பற்றிப் பிடித்துக் கொள்வது பலம் பெருகிறது. அதன் மூலம் அவனது பிரார்த்தனையும் அதிகரிக்கின்றது.

அல்லாஹ் சொல்கிறான்: “அர்ஷை சுமப்போரும், அதைச் சுற்றியுள்ளோரும் தமது இறைவனைப் போற்றிப் புகழ்கின்றனர். அவனை நம்புகின்றனர். எங்கள் இறைவா! ஒவ்வொரு பொருளையும் அருளாலும், அறிவாலும் நீ சூழ்ந்திருக்கிறாய். எனவே மன்னிப்புக் கேட்டு, உனது பாதையைப் பின்பற்றியோரை மன்னிப்பாயாக! அவர்களை நரகத்தின் வேதனையை விட்டும் காப்பாயாக! என்று நம்பிக்கை கொண்டோருக்காக பாவமன்னிப்புத் தேடுகின்றனர்.

“எங்கள் இறைவா! அவர்களையும் அவர்களது பெற்றோர்கள், மனைவியர்கள், அவர்களது சந்ததிகள் என்போரில் நல்லோரை நீ வாக்களித்த நிலையான சொர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வாயாக! நீ மிகைத்தவன் ஞானமிக்கவன். அவர்களைத் தீமைகளிலிருந்து காப்பாயாக! அன்றைய தினம் தீமைகளிலிருந்து நீ யாரைக் காப்பாற்றினாயோ நீ அவருக்கு அருள் புரிந்து விட்டாய். இதுவே மகத்தான வெற்றி” (என்றும் பிரார்த்திக்கிறார்கள்.)

அது ஒரு நீளமான பிரார்த்தனையாகும். மகத்தானதும் மலக்குகளிடமிருந்து அல்லாஹ்வை ஞாபகப்படுத்துகின்ற மு.ஃ. மின்களுக்கு வருகின்ற பரக்கத் பொருந்திய பிரார்த்தனையுமாகும். அல்லாஹ்வை கட்டுப்படுகின்ற அல்லாஹ்வினுடைய ஏவல்களை ஏற்று நடக்கின்ற அல்லாஹ்வை திக்ரு செய்கின்ற மு.ஃ.மின்களுக்கு மலக்குகளிடமிருந்துள்ள முபாரக்கான மகத்தான நீளமான ஒரு பிரார்த்தனை இதுவாகும். அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதற்கு பொருந்திக் கொள்ளப்பட்ட சகோதரனுக்கு இங்கே ஒரு கேள்வி

எழலாம் மு.ஃ.மின்கள் மீது மலக்குகளை இரக்கம் கொள்ளச் செய்தது எது? அவர்கள் இவ்வாறான படித்தரத்தில் இருக்கும் போதும் மு.ஃ.மின்கள் மீது நிலையாக துஆ செய்வதற்கும் மு.ஃ. மின்களுக்கு நிலையாக பிராத்தனை செய்வதற்கும் அவர்களை இட்டுச் சென்றது எது? என்ற கேள்வி எழலாம். மேலும் மனித இனத்தை விட்டும் மலக்குகள் வித்தியாசமானவர்களாக இருக்கின்ற நிலையில் அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்வதற்கான காரணம் என்ன? அவர்கள் மு.ஃ.மின்கள் மீது இரக்கம் கொள்வதற்கான காரணம் என்ன? என்ற கேள்வி எழலாம்.

வானவர்கள் ஒரு வேறுபட்ட இனமாகும். வானவர்கள் ஒளியிலிருந்து படைக்கப்பட்டார்கள். மனிதன் பிசைந்த களிமண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளான். எனவே, இனம் வேறுபட்டது. ஆனால், மு.ஃ.மின்கள் மீது வானவர்களை இரக்கம் கொள்பவர்களாக அல்லாஹ் ஆக்கி உள்ளான். அவர்கள் இருவரும் அல்லாஹ்வை ஈமான் கொண்டுள்ளனர் எனும் பலமான உறவுதான் இதற்கான காரணமாகும்.

அதனால்தான் அல்லாஹ் சொல்கிறான்: அர்ஷை சுமக்கின்றவர்களும் அதை சூழ இருக்கின்றவர்களும் எத்தகையவர்கள் என்றால் அவர்களுடைய இரட்சகனின் புகழைக் கொண்டு துதிக்கின்றார்கள் மேலும் அவனைக் கொண்டு ஈமான் கொண்டிருக்கிறார்கள்.

இதுவே அந்த தொடர்பாகும். இதுவே அந்த உறவாகும். அல்லாஹ்வுடைய புகழைக் கொண்டு தஸ்பீஹ் செய்கிறார்கள். மேலும், அவனை கொண்டு ஈமான் கொண்டுள்ளார்கள் ஒரு மனிதன் அல்லாஹ்வை திக்ர் செய்வது அதிகரிக்கும் போதெல்லாம்

அல்லாஹ்வை அவன் புகழ்வது அதிகரிக்கும் போதெல்லாம் அவனுடைய ஈமான் அதிகரிக்கும் போதெல்லாம், அவனுக்காக மலக்குகள் பாவமன்னிப்பு தேடுவதும் அதிகரிக்கிறது. அல்லாஹ்விடம் அவனை ஏற்றுக் கொள்ளுமாறும், சுவர்க்கத்தை வழங்குமாறும், நரகத்திலிருந்து பாதுகாக்குமாறும், இது அல்லாத அந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அவனுக்காக மலக்குகள் கேட்பதும் அதிகரிக்கின்றது.

07. நாவு பாதுகாக்கப்படுகின்றது:

திக்ருடைய இன்னுமொரு பிரயோசனம் அவனுடைய நாவு பாதுகாக்கப்படுவதற்குரிய காரணமாக திக்ரு அமைந்து விடுவதாகும். உலமாக்கள் சொல்கிறார்கள் நிச்சயமாக நாவு பேசுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் நலவைக் கொண்டு பேசவில்லை என்றால்! நலவுகளிலே மிகவும் உயர்ந்த நலவாகிய திக்ரைக் கொண்டு ஒரு முஸ்லிம் பேசவில்லை என்றால்! தீமைகளை அவன் பேசுவான். வழிகேடுகளை அவன் பேசுவான். இதனால் அவனுடைய நாவு அல்லாஹ்வை திக்ரு செய்வதை விட்டும் காய்ந்துவிடும் அல்லாஹ் பாதுகாப்பானாக ஒவ்வொரு கெட்ட விடயங்களையும் அது பேசும், புறம் பேசுவதில் அது ஈடுபடும், கோள் சொல்வதில் ஆர்வம் காட்டும், அடுத்தவர்களை பரிகசிப்பதில் ஈடுபடும், அடுத்தவர்களை இழிவாகப்பேசுவதில் ஈடுபடும், பொய் சொல்லும், தீய வார்த்தைகள் இது போன்ற விடயங்களை பேசுவதில் அதிகம் ஈடுபடும். அல்லாஹ்வை திக்ரு செய்வதை விட்டும் ஒரு நாவு காய்ந்து விட்டது என்றால் அசத்தியமான விடயங்களில் அது ஈடுபடும், அல்லாஹ்வை திக்ரு செய்வதில் அது ஈடுபட்டால் அசத்தியமான விடயங்கள் பாவமான காரியங்களை விட்டும் அது தூரமாகிவிடும். அதனால், அவனுடைய

நாவு பாதுகாக்கப்படும் அல்லாஹ்வை திக்ரு செய்வதன் மூலம் அவனுக்கும் அவனுடைய நாவுக்கும் கிடைக்கின்ற பாதுகாப்பை வேறு எதிலுமே அவனால் பெற்றுக் கொள்ள முடியாது.

எனவே, அல்லாஹ்வை திக்ரு செய்வது ஒரு மனிதனுடைய நாவை பாதுகாக்கின்றது, புறம் பேசுவது, கோள் சொல்வது, பரிகசிப்பது, அடுத்தவர்களை இழிவாகப் பேசுவது போன்ற செயல்களில் இருந்து அவனுடைய நாவை அது பாதுகாக்கின்றது. இது அல்லாஹ்வை திக்ரு செய்வதின் பிரயோசனங்களில் உள்ள மிகப்பெரும பிரயோசனமாகும்

08. அல்லாஹ்வை அதிகம் விரும்புவதற்கான அடையாளம்.

அல்லாஹ்வை திக்ரு செய்வதின் பயன்பாடுகளில் உள்ள இன்னுமொரு விடயம் அல்லாஹ்வை திக்ரு செய்பவர் அல்லாஹ்வை அதிகம் விரும்புவதற்கான அடையாளமாக அது இருப்பதாகும்.

சில அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்: அல்லாஹ்வை நேசிப்பதற்குரிய அடையாளம் அவனை அதிகமாக திக்ரு செய்வதாகும். ஏனெனில், நீ ஒரு விடயத்தை விரும்பினால் அதை அதிகமாக ஞாபகப்படுத்துவாய்.

அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதால் அல்லாஹ்வை திக்ரு செய்வதால் ஒரு இறை விசுவாசி பெற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் அதிகமான பயன்கள் பிரயோசனங்களில் சிலதே மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட என்னுடைய சகோதரனே! நீ **அல்வாபிலுஸ்ஸையிப்** என்ற நூலை வாசித்தால் இந்த விடயத்திலே நான் மிக மிக அதிகமாக சுருக்கியே இங்கு பதிவிட்டுள்ளேன் என்பதை அறிந்து கொள்வாய். மேலும் அல்லாஹ்வை திக்ரு செய்வதனால் ஏற்படும் பயன்களை நான் பட்டியல் படுத்துவதில் மிகவும் தவறிழைத்திருக்கிறேன் என்பதை அறிந்து கொள்வாய். நிச்சயமாக இங்கே நான் குறிப்பிட்டிருப்பவை அல்லாஹ்வை திக்ரு செய்வதனால் ஏற்படுகின்ற மிக மிக அதிகமான பயன்களில் சிலவையாகும், மிகவும் சொற்பமானவையாகும்.

அல்லாஹ்வை திக்ரு செய்வதனால் ஏற்படும் பயன்களை இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் மிகவும் சிறப்பாக தெளிவுபடுத்தி யுள்ளார்கள். மிகவும் அழகாக அதை விவரித்துள்ளார்கள். அதனால், நான் மேலே கூறியதைப் போல திரும்பவும் உறுதிப்பட கூறிக் கொள்வது அந்த நூலை ஒவ்வொருவரும் வாசியுங்கள் அதிலிருந்து பயனடையுங்கள்.

அது உங்களுடைய வீடுகளிலே எல்லோருக்கும் கிடைக்க கூடிய விதத்தில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் மேலும் உங்களுடைய பிள்ளைகள் மனைவிகள் பெண்பிள்ளைகள் உறவுக்காரர்கள் அனைவரையும் அதை வாசிக்குமாறு தூண்டும்படி வேண்டிக் கொள்கிறேன். இதன் மூலம் அவர்கள் பெரும் நலவுகளை அடைந்து கொள்வார்கள். அதிகமான நன்மைகளை பெற்றுக் கொள்வார்கள். பாதுகாப்பையும் அபயத்தையும் அடைவார்கள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சில பயன்கள் தவிர்ந்த வேறு அதிகமான பயன்களையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள்.

திக்ருடைய சிறப்புக்கள் பற்றிய சில கவிதைகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அது அழகிய சில கவிதைகளாகும் அதிலே அப்துர் ரஹ்மான் இப்னு ஸஃதி (ரஹ்) அவர்கள் மிகவும் இரத்தின சுருக்கமாக கவிதை நடையில் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதன் பயன்களை குறிப்பிட்டுள்ளார்கள், ஒன்று சேர்த்துள்ளார்கள்.

அதிலே அவர்கள் சொல்கிறார்கள்: அல்லாஹ்வை ரகசியமாகவும் பரகசியமாகவும் திக்ர் செய்வது உன்னை விட்டும் கவலையையும் கைசேதத்தையும் துரத்திவிடும், உன்னை விட்டும் கைசேதத்தையும் கவலையையும் நீக்கி அவற்றை அது துரத்தி விடும், உலகத்திலும் மறுமையிலும் நலவுகளை அது உன்னிடம் கொண்டு வரும். உன்னிடம் என்றாவது ஒரு நாள் தீய எண்ணங்கள் ஊசலாட்டங்கள் வந்தாலும் அவற்றை அது அழித்துவிடும்.

நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய தோழர்களுக்கு ஒரு நாள் சொன்னார்கள்: நிச்சயமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவ-தைக் கொண்டு உதவி தேடுங்கள் மேலும் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களுக்கு அதையே வஸிய்யத்துச் செய்தார்கள். நல்ல விடயங்களை கொண்டும் நலவுகளைக் கொண்டும் அல்லாஹ்வுடைய அருள்களுக்கு நன்றி செலுத்தி அவனை வணங்குமாறு உபதேசித்தார்கள். அவரிடம் உபதேசத்தை கோரி வந்த ஒரு மனிதனுக்கு இஸ்லாத்தின் போதனைகள் அதிகமாக உள்ளது. எல்லாவற்றையும் எல்லா நேரங்களிலும் என்னால் செய்ய முடியாது என்று அவர் சொன்ன போது: திக்ரின் மூலம் உன்னுடைய நாவு எல்லா சந்தர்ப்பங்களிலும் நனைந்து கொண்டே இருக்கட்டும் இவை அனைத்திற்கும் அது உனக்கு உதவி செய்யக்கூடியதாக உனக்கு நன்மையை பெற்று தரக்கூடியதாக இருக்கும் என்று சொன்னார்கள். மேலும் அவர்களுக்கு அத்ன் எனும் சுவர்க்கத்தில்

மரங்கள் விதைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஏழைகளுக்கு உணவு விஸ்தீரனத்தை கொடுக்கும் என்றும் அறிவித்தார்கள்.

மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவனை ஞாபகப்படுத்துபவர்களை ஞாபகப்படுத்துகிறான் என்றும், அவனுடைய ஒவ்வொரு விடயங்களிலும் அவனோடு இருந்து அதை அவனுக்கு இலகுபடுத்துகிறான், என்றும் சொன்னார்கள். மேலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவர் சுவர்க்கத்தில் நிரந்தரமாக இருப்பார் என்றும் அவர் சுவர்க்கத்தில் நிரந்தரமாக்கப்படுவதனால் கஸ்டங்கள் அனைத்தும் இல்லாமல் போகும் என்றும் சொன்னார்கள். மேலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது தான் அவனை விரும்புவதற்கும் அவனின் பால் வழி காட்டுவதற்குமான அவனின் நேர்வழியை பெறுவதற்குமான ஒரே வழி என்றும் அறிவித்தார்கள், மேலும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவது ஒரு அடியானை புறம் பேசுதல், கோள் சொல்லுதல், மார்க்கத்தை விட்டு விடக்கூடிய ஒவ்வொரு சொற்களில் இருந்தும் அவனை பாதுகாப்பதாகும். ஒருமைப்படுத்தப்படுவதில் சிறந்தவனான அந்த அல்லாஹ்வை அதிகம் ஞாபகப்படுத்துவதனால் அதிகமான நன்மைகளும் அதிகமான பயன்களும் கிடைக்கும். என்றாலும் எங்களுடைய அறிவீனத்தின் காரணமாக அல்லாஹ்வை நாங்கள் வணங்குவதை குறைத்துக்கொண்டதைப் போலவே அவனை ஞாபகப்படுத்துவதும் எங்களிடம் குறைந்து போனது (அப்துர் ரஹ்மான் அஸ்ஸ.ஃ.தி)

திக்ருடைய பயன்களைப் பற்றி முழுமையான தெளிவை உள்ளடக்கி உள்ள பயனுள்ள மிக மகத்தான இந்த கவிதைகளை வழங்கிய அப்துர் ரஹ்மான் அஸ்ஸ.ஃ.தி (ரஹ்) அவர்களுக்கு அல்லாஹ் மிக சிறந்த கூலியை வழங்குவானாக, அவருக்கு

அருள் செய்வானாக, யார் இந்த கவிதையினுடைய விளக்கங்களையும் தெளிவையும் விவரங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்களுடைய அல்வாபிலுஸ் ஸையிப் என்ற நூலை வாசிக்கட்டும் ஏனெனில் அல்வாபிலுஸ்ஸையிப் என்பது திக்ருனுடைய பயன்களை பற்றிய விபரங்களையும், அதனுடைய எண்ணிக்கைகளையும், அது பற்றிய தெளிவையும் கூறியிருக்கின்ற நூல்களில் மிகவும் அழகாக குறிப்பிட்டுள்ள நூலாகும். அதில் ஒவ்வொன்றிற்குமான ஆதாரங்களும் அந்த ஆதாரங்கள் பற்றிய தெளிவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ் அவ்வாறான அறிஞர்களுக்கு சிறந்த கூலியை வழங்குவானாக.

மேலும் அல்லாஹ் எதை எமக்கு கற்றுத் தந்தானோ அதை கொண்டு பிரயோசனம் அடையச் செய்வானாக, அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதற்கும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் அவனை நல்ல முறையில் வணங்குவதற்கும் எமக்கு உதவுவானாக, அவனைப் புறக்கணிப்பதிலிருந்தும் அவனை மறந்து வாழ்வதிலிருந்தும் எங்களை பாதுகாப்பானாக எங்களை நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழி காட்டக்கூடியவர்களாகவும் ஆக்குவானாக.

இறைவா! எங்களுக்காக எங்களுடைய காரியங்களின் பாதுகாப்பாக இருக்கின்ற எங்களுடைய மார்க்கத்தை எங்களுக்கு சீர் செய்வாயாக. எங்களுடைய வாழ்வை அமைத்துள்ள இந்த உலகத்தை எங்களுக்கு சீர் செய்வாயாக, எங்களுடைய மீளுதல் உள்ள எங்களுடைய மறுமை வாழ்க்கையை எங்களுக்கு சீர்படுத்துவாயாக. எங்களுடைய வாழ்வை நலவுகள் அதிகம் கொண்டதாக ஆக்குவாயாக. எங்களுடைய மரணத்தை ஒவ்வொரு

தீங்கிலிருந்தும் விடுதலை பெற்றதாக ஆக்குவாயாக, நிச்சயமாக அல்லாஹ் மிகவும் அறிந்தவன். அல்லாஹ்வுடைய அடிமையும் அவனுடைய தூதருமான நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தினர் அவர்களின் தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வுடைய ஸலவாத்தும் ஸலாமும் என்றென்றும் உண்டாவதாக.

♦ ❒ ♦

பொருளடக்கம்...

فوائد الذكر وثمراته

أ.د.عبد الرزاق بن عبد المحسن البدر
{حفظه الله}